**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2025 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 09 ம் நாள் செவ்வாய்கிழமை**

**I.A.No.01/2025**
**in**
**I.A.No.79/2020**
**in**
**O.S.No.19/2019**

கோமதி ...மனுதாரர்/மனுதாரர்/வாதி

/எதிர்/

செந்துார் என்ற செந்துார் பாண்டி
யாதவ் (இறப்பு) வகையறா ... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/
பிரதிவாதிகள்

இந்த இடைநிலை மனு என் முன்பாக 20.11.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.K.அழகர்சாமி அவர்கள் ஆஜராகியும், 2 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்தும், தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இன்று வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் இ.ம.எண்.79/2020 ல் 21 ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்ப்பதில் 4211 நாட்கள் காலதாமதமானதால் வழக்கு abate ஆகிவிட்டதால் மனுவை Set aside செய்து இ.ம.எண்.79/2020 ல் உத்தேச 22 முதல் 24 எதிர்மனுதாரர்களாக கட்சி சேர்த்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி காலவரையறைச்சட்டம் பிரிவு 5 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2) **மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.**</u>

தாவா வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வழக்கை மேல்நடத்தி வந்த நிலையில் மனுதாரருக்கு சொந்தமான பூர்விக பாத்தியப்பட்ட சில சொத்துக்களை சேர்க்காததால் வழக்கை வாபஸ் பெற்று வேறொரு வழக்கு தாக்கல் செய்ய ஏதுவாக நீதிமன்றத்தில் இ.ம.எண்.24/2019 மனு தாக்கல் செய்ததில் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளதாகவும், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் சிவில் ரிவிஷன் மனு எண்.1088/2019 தாக்கல் செய்ததில் மேற்படி மனு மீது விசாரணை நடைபெற்று தாவா வழக்கில் விடுபட்ட சொத்துக்களை சேர்ப்பதற்கு உரிய மனு செய்து வழக்கை மேல்நடத்த கடந்த 10.07.2019 ம் தேதி உத்தரவு ஏற்பட்டுள்ளதாகவும், மேற்படி உத்தரவின் அடிப்படையில் தாவா வழக்கில் விடுபட்ட சொத்துக்களையும், அச்சொத்துக்களை கிரையம் பெற்றவர்களையும் சேர்த்து பிராதை திருத்தம் செய்து கொண்டு வழக்கை நடத்த இ.ம.எண்.79/2020 மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருவதாகவும், மேற்படி இ.ம.எண்.79/2020 ல் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பே 21 ம் எதிர்மனுதாரர் 21.07.2013 ம் தேதியன்று இறந்து விட்ட விபரம் கடந்த 30.11.2020 ம் தேதி நீதிமன்றத்திற்கு தெரிய வந்ததாகவும், மேற்படி இறந்த 21 ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்ப்பதில் 4211 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளதால் அதனை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**3) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்.**</u>

மனுவில் கூறியுள்ள காரணங்கள் மறுக்கப்படுகிறது என்றும், மனுவில் கூறியுள்ள காரணம் ஏதும் ஏற்றுக்கொள்ளக் கூடியது இல்லை என்றும், மனு செய்வதற்கு சரியான காரணம் ஏதும் மனுவில் குறிப்பிடவில்லை என்றும், அனைத்து காரணமும் நன்கு தெரிந்திருந்தும் சுமார் 4211 நாட்கள் காலதாமதமாக மனுவைத் தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்கள் வேண்டுமென்றே நீதிமன்றத்திற்கு ஆஜராகி வழக்கை நடத்தாமல் இருந்து வருவதாகவும், மனுவை பெயரில் தாக்கல் செய்து வழக்கை இழுத்தடிப்பதாகவும், மனுதாரர்கள் வேண்டுமென்றேதான் இந்த மனுவை காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதாகவும், காலதாமதத்திற்கான ஏற்றுக் கொள்ளத்தக்க

காரணம் எதையும் கூறாதது மட்டுமல்ல, எந்தக்காரணத்தையும் மனுதாரர்கள் தங்களது மனுவில் கூறாததிலிருந்தே மனுதாரர்கள் பக்கம் நியாயமான காரணம் ஏதுமில்லை என்பதும் அசல் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்திலேயே மனுவை தாமதமாக தாக்கல் செய்துள்ளதாகவும், வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்பதே மனுதாரர்களின் நோக்கம் என்பதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இந்த இடைநிலை மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதேயாகும்.

இம்மனுவில் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

இம்மனுதாரர் அசல் வழக்கின் வாதி. மனுதாரர் தரப்பில் பிராதை திருத்தம் செய்து கொண்டு வழக்கை நடத்த இ.ம.எண்.79/2020 மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருவதாகவும், மேற்படி இ.ம.எண்.79/2020ல் அறிவிப்பு அனுப்புவதற்கு முன்பே 21ம் எதிர்மனுதாரர் 21.07.2013ம் தேதியன்று இறந்து விட்ட விபரம் கடந்த 30.11.2020ம் தேதி நீதிமன்றம் மூலம் தெரிய வந்ததால், இறந்த 21ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்ப்பதில் 4211 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனுவில் காலதாமதத்திற்கு போதுமான காரணங்கள் சொல்லப்படவில்லை என்றும், அதனை நிரூபிக்க ஆதாரங்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அசல் வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்த வகையில் அசல் வழக்கானது 2013ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வந்த நிலையில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்தரவின்படி பிராதினை திருத்தம் செய்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவின்படி மனுதாரர் பிராதினை திருத்தம் செய்யக்கோரி மனுதாக்கல் செய்துள்ளார்.

மேற்படி மனுவில் 21ம் எதிர்மனுதாரர் இறந்த விபரம் 30.11.2020ம் தேதியன்று நீதிமன்றம் வாயிலாக மனுதாரருக்கு தெரிய வந்ததாக மனுதாரர் ஒப்புக்கொண்டுள்ளார்.

அதன்பின்னர் 30 நாட்களுக்குள் வழக்கில் 21ம் எதிர்மனுதாரரின் வாரிசுகளை சேர்க்க மனுதாக்கல் செய்யாமல் 4211 நாட்கள் காலதாமதமாக இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆனால் மேற்கண்ட காலதாமதமான நாட்களுக்கு மனுதாரர் தரப்பில் குறிப்பாக எவ்வித காரணங்களும் தெரிவிக்கவில்லை. மேலும் காலதாமத மனுவில் ஒவ்வொரு நாள் காலதாமதத்திற்கும் கட்டாயம் விளக்கம் அளிக்கவேண்டும் என்பது விதியாகும்.

மனுதாரர் மனுவில் எந்தவொரு சரியான காரணமும் தெரிவிக்காதது ஏற்கத்தக்கதாக இல்லை. மேலும் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்ததற்கான காரணம் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன்தான் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் இம்மனு தள்ளுபடி செய்யப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 09.12.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2025.12.09 16:44:42 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u>:** இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2025.12.09 16:44:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.

I.A.No.01/2025
in
I.A.No.79/2020
in
O.S.No.19/2019

Date:09.12.2024.
IA order